28723

உ

சிவமயம்.

சேந்தனார்முதலியவொன்பதின்மர்

திருவாய்மலர்ந்தருளிய

திருவிசைப்பா.

திருப்பல்லாண்டு.

THUMBOO CHETTY ST. MADRAS 289

இவை

ஸ்ரீ - புஷ்பரதசெட்டியாரால்

தமது

கலாரத்நாகரஅச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

சென்னை

1887.

திருச்சிற்றம்பலம்.

ஞ சி ப த் தி ர ம்.

தி ரு வி சை ப் பா.

க. திருமாளிகைத்தேவர்.

பதிகம். பக்கம்.

க. கோயில்	௬.
உ. கோயில்-உயர்கொடியாடை	௫.
௩. கோயில்-உறவாகியயோகம்	௯.
௪. கோயில்-இணங்கிலாயீசன்	க௪.

உ. சேந்தனார்.

க. திருவீழிமிழலை	க௮.
உ. திருவாவடுதுறை	உ௩.
௩. திருவிடைக்கழி	உ௭.

௩. கருவூர்த்தேவர்.

க. கோயில்	௩க.
உ. திருக்களந்தையாதித்தேச்சரம்	௩௫.
௩. திருக்கீழ்க்கோட்டூர்மணியம்பலம்	௩௯.
௪. திருமுகத்தலை	௪௩.
௫. திரைலோக்கியசுந்தரம்	௪௭.
௬. கங்கைகொண்டசோளேச்சரம்	௫க.
௭. திருப்பூவணம்	௫௫.
௮. திருச்சாட்டியக்குடி	௫௮.

பதிகம். பக்கம்

௯. தஞ்சையிராசராசேச்சரம் ௬௨.
௰. திருவிடைமருதூர் ௬௬.

௪. பூந்துருத்திநம்பிகாடநம்பி.

௧. திருவாரூர் ௭௰.
௨. கோயில். ௭௧.

௫. கண்டராதித்தர்.

௧. கோயில் ௭௩.

௬. வேணாட்டடிகள்.

௧. கோயில் ௭௭.

௭. திருவாலியமுதனார்.

௧. கோயில்-பாதாதிகேசம் ௮௧.
௨. கோயில்-பவளமால்வரை ௮௫.
௩. கோயில்-அல்லாய்ப்பகலாய் ௮௯.
௪. கோயில்-கோலமலர் ௯௩.

௮. புருடோத்தமநம்பி.

௧. கோயில்-வாரணி ௯௭.
௨. கோயில்-வானவர்கள் ௧௦௧.

௯. சேதிராயர்.

௧. கோயில் ௧௦௩.

திருப்பல்லாண்டு.

சேந்தனார்.

௧. கோயில் ௧௦௬.

திருச்சிற்றம்பலம்.

திருவிசைப்பா அருளிச்செய்த

ஒன்பதுநாயன்மார்திருநாமமும்

திருப்பதிகவகையும்

பண்ணின்வகையுந் தெரியுமடைவு.

செம்பொன்மணி யம்பலத்து நிருத்த னூர்க்குத் திரு
விசைப்பா வுரைத்தவர்தந் திருப்பேர் சொல்லிற், பம்பு
புகழ் செறிதிருமா ளிகைமெய்த் தேவர் பரிவுடைய சேந்
தனார் கருவூர்த் தேவர், நம்பிகாடவர்கோனற் கண்டரா
தித்தர் நன்குயர்வே ணாட்டடிக டிருவாலி யமுத, ரம்புவி
யோர் புகழ்புருடோத் தமர்சேதி ராய ராகவிவ ரொன்
பதின்மர் தாமுறைகண் டடைவே. (௧)

அடைவுறுமா ளிகைத்தேவர் நான்குசேந்த ரன்புறு
பல் லாண்டொன்றோ டிசைப்பா மூன்று, திடமுடைய
கருவூரர் பத்துவீறிற் சிறந்தகா டவரிரண்டு கண்டர்வே
ணாடர், படிபுகழோவ் வொன்றுதிரு வாலிநான்கு பன்னு
புருடோத்தமனா ரிரண்டு சேதிராய, ருடையதிருக் கடைக்
காப்பொன் றுகவிரு பத்தொன் பானோது செய்யுண்மூந்
நூற் றறுபதினோ டைந்தே. (௨)

இடர்கெடுத் தென்னை யாண்டுகொண் டென்னு
ளிருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கி னுள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதி
யடல்விடைப் பாகா வம்பலக் கூத்தா
வயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே. (உ)

தற்பரம் பொருளே சசிகண்ட சிகண்டா
சாமகண் டாவண்ட வாணா
நற்பெரும் பொருளா யுரைகலந் துன்னை
யென்னுடை நாவினா னவில்வா
னற்பனேன் னுள்ளத் தளவிலா வுன்னைத்
தந்தபொன் னம்பலத் தாடு
கற்பமா யுலகா யல்லையா னாயைத்
தொண்டனேன் கருதுமா கருதே. (ஙு)

பெருமையிற் சிறுமை பெண்ணொடா ணாயென்
பிறப்பிறப் பறுத்தபே ரொளியே
கருமையின் வெளியே கயற்கணா ளிமவான்
மகளுமை யவள்களை கண்ணே
யருமையின் மறைநான் கோலமிட் டரற்று
மப்பனே யம்பலத் தமுதே
யொருமையிற் பலப்புக் குருவிநின் றாயைத்
தொண்டனே னுரைக்குமா றுரையே. (ச)

கோலமே மேலை வானவர் கோவே
குணங்குறி யிறந்ததோர் குணமே
காலமே கங்கை நாயகா வெங்கள்
கால காலா காமநாசா
வாலமே யமுதுண் டம்பலஞ் செம்பொற்
கோயில் கொண்டாட வல்லானே
ஞாலமே தமியே னற்றவத் தாயைத்
தொண்டனே னணுகுமா றணுகே. (ரு)

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
வாறணி சடையெம் மற்புதக் கூத்தா
வம்பொன் செய்யம்பலத் தரசே
யேறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே. (சா)

தனதனற் றோழா சங்கரா சூல
பாணியே தாணுவே சிவனே
கனகநற் றூணே கற்பகக் கொழுந்தே
கண்கள் மூன்றுடையதோர் கரும்பே
யனகனே குமர விநாயக சனக
வம்பலத் தமர சேகரனே
யுனகழ லிணையென் னெஞ்சினு ளினிதாத்
தொண்டனே னுகருமா றுகரே. (எ)

திறம்பிய பிறவிச் சிலதெய்வ நெறிக்கே
திகைக்கின்றேன் றனைத் திகையாமே
நிறம்பொன்னு மின்னு நிறைந்தசே வடிக்கீழ்
நிகழ்வித்த நிகரிலா மணியே
யறம்பல திறங்கண் டருந்தவர்க் கரசா
யாலின்கீ ழிருந்த வம்பலவா
புறஞ்சமண் புத்தர் பொய்கள் கண்டாயைத்
தொண்டனேன் புணருமா புணரே. (அ)

தக்கனற் றலையு மெச்சன்வன் றலையுந்
தாமரை நான்முகன் றலையு
மொக்கவிண் டுருள வொண்டிருப் புருவ
நெறித் தருளிய வுருத்திரனே
யக்கணி புலித்தோ லாடைமே லாட
வாடப்பொன் னம்பலத் தாடுஞ்
சொக்கனே யெவர்க்குந் தொடர்வரி யாயைத்
தொண்டனேன் றொடருமா தொடரே. ()

மடங்கலாய்க் கனகன் மார்புகீண் டானுக்
கருள்புரி வள்ளலே மருளா
ரிடங்கொண் முப்புரம்வெந் தவியவைதிகத்தே
ரேறிய வேறு சேவகனே
யடங்க வல்லரக்க னருட்டிரு வரைக்கீ
ழடர்த்தபொன் னம்பலத் தரசே
விடங்கொள் கண்டத்தெம் விடங்கனே யுன்னை
த் தொண்டனேன் விரும்புமா விரும்பே.()

மறைகளு மமரர் கூட்டமு மாட்டா
தயன்றிரு மாலொடு மயங்கி
முறைமுறை முறையிட் டோர்வரி யாயை
மூர்க்கனேன் மொழிந்த புன்மொழிக
ளறைகழ லரன்சி ரறிவிலா வெறுமைச்
சிறுமையிற் பொறுக்கு மம்பலத்து
ணிறைதரு கருணா நிலயமே யுன்னைத்
தொண்டனே னினையுமா நினையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

உ. கோயில் - உயர்கொடியாடை.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

உயர்கொடி யாடை மிடைபட லத்தி
ஞெமதா மப்பட லத்தின்
பெயர்நெடு மாடத் தகிற்புகைப் படலம்
பெருகிய பெரும்பற்றப் புலியூர்ச்
சியரொளி மணிக ணிரந்துசேர் கனக
நிறைந்தசிற் றம்பலக் கூத்தா
மயர்வறு மமரர் மகுடந்தோய் மலர்ச்சே
வடிகளென் மனத்து வைத்தருளே. (க)

கருவளர் மேகத் தகடுதோய் மகுடக்
 கனகமா ளிகைகலந் தெங்கும்
பெருவளர் முத்தீ நான்மறைத் தொழில்சா
 லெழின்மிகு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் தெய்வப் பதிவதி நிதியந்
 திரண்டசிற் றம்பலக் கூத்தா
வுருவளரின்பச் சிலம்பொலி யலம்பு
 முன்னடிக் கீழதென் னுயிரே. (உ)

வரம்பிரி வாளை மிளிர்மடுக் கமலங்
 கரும்பொடு மாந்துமே திகள்சேர்
பரம்பிரி செந்நெற் கழனிச்செங் கழுநீர்ப்
 பழனஞ்சூழ் பெரும்பற்றப் புலியூர்ச்
சிரம்புணர் முடிவா னவரடி முறையா
 லிறைஞ்சுசிற் றம்பலக் கூத்தா
நிரந்தர முனிவர் நினைதிருக் கனைக்கா
 லினைந்துநின் றுருகிற்றதென் னெஞ்சே. ()

தேர்மலி விழவிற் குழவொலி தெருவிற்
 கூத்தொலி யேத்தொலி யோத்தின்
பேரொலி பரந்து கடலொலி மலியப்
 பொலிதரு பெரும்பற்றப் புலியூர்ச்
சீர்நில விலயத் திருநடத் தியல்பிற்
 றிகழ்ந்தசிற் றம்பலக் கூத்தா
வார்மலி முலையாள் வருடிய திரண்மா
 மணிக்குறங் கடைந்ததென் மதியே. (ச)

நிறைதழை வாழை நிழற்கொடி நெடுந்தெங்
கிளங்கமு குளங்கொணீள் பலமாப்
பிறைதவழ் பொழில்சூழ் கிடங்கிடைப் பதண
முதுமதிற் பெரும்பற்றப் புலியூர்ச்
சிறைகொணீர்த் தரளத் திரள்கொணித் திலத்
செம்பொற்சிற் றம்பலக் கூத்த [த
பொறையணி நிதம்பப் புலியத ளாடைக்
கச்சுநூல் புகுந்ததென் புகலே. (ரு)

அதுமதி யிதுவென் றலந்தலை நூல்கற்
றழைப்பொழிந் தருமறை யறிந்து
பிதுமதி வழிநின் றொழிவிலா வேள்விப்
பெரியவர் பெரும்பற்றப் புலியூர்ச்
செதுமதிச் சமணுந் தேரருஞ் சேராச்
செல்வச்சிற் றம்பலக் கூத்த
மதுமதி வெள்ளத் திருவயிற் றுந்தி
வளைப்புண்டென் னுண்மகிழ்ந் ததுவே. ()

பொருவரைப் புயத்தின் மீமிசைப் புலித்தோல்
பொடியணி பூணநூ லகலம்
பெருவரை புரைதிண் டோ ளுடன் காணப்
பெற்றவர் பெரும்பற்றப் புலியூர்த்
திருமரு வுதரத் தார்திசை மிடைப்ப
நடஞ்செய்சிற் றம்பலக் கூத்த
வுருமரு வுதரத் தனிவடந் தொடர்ந்து
கிடந்ததென் னுணர்வுணர்ந் துணர்ந்தே. ()

கணியெரி விசிறு கரந்துடி விடவாய்க்
  கங்கணஞ் செங்கைமற் றபயம்
பிணிகெட விவைகண் டான்பெரு நடத்திற்
  பிரிவிலார் பெரும்பற்றப் புலியூர்த்
திணிமணி நீல கண்டத்தென் னமுதே
  சீர்கொள்சிற் றம்பலக் கூத்த
வணிமணி முறுவற் பவளவாய்ச் செய்ய
  சோதியு ளடங்கிற்றென் னறிவே. (அ)

திருநெடு மாலிந் திரனயன் வானோர்
  திருக்கடைக் காவலி னெருக்கிப்
பெருமுடி மோதி யுகுமணி முன்றிற்
  பிறங்கிய பெரும்பற்றப் புலியூர்ச்
செருநெடு மேரு வில்லின்முப் புரநீ
  விரித்தசிற் றம்பலக் கூத்த
கருவடி குழைக்கா தமலச்செங் கமல
  மலர்முகங் கலந்ததென் கருத்தே. (கூ)

ஏர்கொள்கற் பகமொத் திருசிலைப் புருவம
  பெருந்தடங் கண்கண்மூன் றுடையோன்
பேர்களா யிரநூ றாயிரம் பிதற்றும்
  பெற்றியோர் பெரும்பற்றப் புலியூர்ச்
சீர்கொள்கொக் கிறகுங் கொன்றையுந் துன்று
  சென்னிச்சிற் றம்பலக் கூத்த
நீர்கொள்செஞ் சடைவாழ் மதிபுது மத்த
  நிகழ்ந்தவென் சிந்தையு ணிறைந்தே. (கO)

காமனைக் காலன் றக்கன்மிக் கெச்சன்
படக்கடைக் கணித்தவ னல்லாப்
பேய்மனம் பிறிந்த தவப்பெருந் தொண்டர்
தொண்டனேன் பெரும்பற்றப் புலியூர்ச்
சேமநற் றில்லை வட்டங்கொண் டாண்ட
செல்வச்சிற் றம்பலக் கூத்த
பூமல ரடிக்கீழ்ப் புராணபூ தங்கள்
பொறுப்பரொன் புன்சொலின் பொருளே. ( )

திருச்சிற்றம்பலம்.

---

௩. கோயில் - உறவாகியயோகம்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

உறவாகிய யோகமும் போகமு மா
யுயிராளி யென்னுமென் பொன்னொருநாட்
சிறவா தவர்புரஞ் செற்ற கொற்றச்
சிலைகொண்டு பன்றிப்பின் சென்றுநின்ற
மறவா வென்னும் மணிநீ ரருவி
மகேந்திர மாமலை மேலுறையுங்
குறவா வென்னுங் குணக்குன்றே யென்னுங்
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. (௧)

காடாடு பல்கணஞ் சூழக் கேழற்
கடும்பின் னெடும்பகற் கானடந்த
வேடா மகேந்திர வெற்பா வென்னும்
வினையேன் மடந்தை விம்மா வெருவுஞ்
சேடா வென்னுஞ் செல்வர் மூவாயிரஞ்
செழுஞ்சோதி யந்தணர் செங்கை தொழுங்
கோடா வென்னுங் குணக்குன்றே யென்னுங்
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. (௨

கானே வருமுர ணேன மெய்த
களியார் புளினநற் காளா யென்னும்
வானே தடவு நெடுங் குடுமி
மகேந்திர மாமலை மேலிருந்த
தேனே யென்னுந் தெய்வவாய் மொழியார்
திருவாளர்மூவா யிரவர் தெய்வக்
கோனே யென்னுங் குணக்குன்றே யென்னுங்
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. (௩)

வெறியேறு பன்றிப்பின் சென்றொரு நாள்
விசயற் கருள்செய்த வேந்தே யென்னு
மறியேறு சாரன் மகேந்திர மா
மலைமேலிருந்த மருந்தே யென்னு
நெறியே யென்னு நெறிநின் றவர்க
ணினைக்கின்ற நீதி வேதாந்தநிலைக்
குறியே யென்னுங் குணக்குன்றே யென்னுங்
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. (௪)

செழுந்தென் றலன்றிலித் திங்கள் கங்கு
றிணைவீணை தீங்குழல் சேவின்மணி
யெழுந்தின் றென்மேற் பணையா யாவாடு
மெனைநீ நலிவதென் னேயென்னு
மழுந்தா மகேந்திரத் தந்தரப்புட்
கரசுக் கரசே யமரர்தனிக் [ங்
கொழுந்தே யென்னுங் குணக்குன்றே யென்னு
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. (ரு)

வண்டார் குழலுமை நங்கை முன்னே
மகேந்திரச் சாரல் வராகத்தின்பின்
கண்டார் கவலையில் லாடி வேடர்
கடிநா யுடன்கை வளைந்தாயென்னும்
பண்டாய மலரயன் றஞ்ச னெச்சன்
பகலோன் றலைபற் பசுங்கண
கொண்டா யென்னுங் குணக்குன்றே யென்னுங்
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. (சு)

கடுப்பாய்ப் பறை கறங்கக் கடுவெஞ்
சிலையுங்கணையுங் கவணுங் கைச்கொண்
டுடுப்பாய் தோல் செருப்புச் சுரிகை
வராகமுன் னோடி விளியுளைப்ப
நடப்பாய் மகேந்திர நாதநா தாந்தத்
தனையா வென்பார்க்கு நாதாந்தபதங் [ங்
கொடுப்பா யென்னுங் குணக் குன்றேயென்னு
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. (எ)

சேவேந்து வெல்கொடி யானே யென்னுஞ்
சிவனேயென் சேமத் துணையேயென்னு
மாவேந்து சாரன் மகேந் திரத்தில்
வளர்நாயகா விங்கே வாராயென்னும்
பூவேந்தி மூவா யிரவர் தொழப்
புகழேந்து மன்று பொலியநின்ற
கோவே யென்னுங் குணக்குன்றே யென்னுங்
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. (அ)

தரவார் புனஞ் சுனைதா ழருவித்
தடங்கல் லுறையு மடங்கலமர்
மரவார் பொழிலெழில் வேங்கை யெங்கு
மழைசூழ் மகேந்திர மாமலைமேற்
சுரவா வென்னுஞ் சுடர்நீண் முடிமாலய
னிந்திரன் முதற்றேவர்க் கெல்லாங்
குரவா வென்னுங் குணக்குன்றே யென்னுங்
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. (கூ)

திருநீறிடா வுருத் தீண்டே னென்னுந்
திருநீறு மெய்த்திருமுண் டத்திட்டுப்
பெருநீல கண்டன் றிறங்கொண் டிவள்
பிதற்றிப் பெருந்தெரு வேதிரியும்
வருநீ ரருவி மகேந்திரப் பொன்
மலையின் மலைமகளுக் கருளுங்
குருநீ யென்னுங் குணக்குன்றே யென்னுங்
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. (க0)

உற்றாயென் னுமுன்னை யன்றி மற்றொன்
றுணரேனென்னு முணர்வுகள் கலக்கப்
பெற்றாய வைந்தெழுத்தும் பிதற்றிப் பிணிதீர
வெண்ணீ றிடப்பெற்றே னென்னுஞ்
சுற்றாய சோதி மகேந்திரஞ் சூழ
மனத்திருள் வாங்கிச் சூழாத நெஞ்சிற்
குற்றா யென்னுங் குணக்குன்றே யென்னுங்
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. (கக)

வேறாக வுள்ளத் துவகை விளைத்
தவனிச் சிவலோக வேதவென்றி
மாறாத மூவா யிரவ ரையு
மெனையும் மகிழ்ந்தாள வல்லாயென்னு
மாறார் சிகர மகேந்திரத் துன்
னடியார் பிழைபொறுப் பாய்மாதோர்
கூறா யென்னுங் குணக்குன்றே யென்னுங்
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

௪. கோயில் - இணங்கிலாவீசன்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

இணங்கிலா வீசனேசத்
திருந்தசித் தத்தினேற்கு
மணங்கொள்சீர்த் தில்லைவாணன்
மணவடியார்கள் வண்மைக்
குணங்களைக் கூறுவீறிற்
கோறைவாய்ப் பீறற்பிண்டப்
பிணங்களைக் காணுகண்வாய்
பேசாதப் பேய்களோடே. (க)

எட்டுரு விரவியென்னை
யாண்டவ னீண்டுசோதி
விட்டிலங் கலங்கற்றில்லை
வேந்தனைச் சேர்ந்திலாத
துட்டரைத் தூர்த்தவார்த்தைத்
தொழும்பரைப் பிழம்புபேசும்
பிட்டரைக் காணுகண்வாய்ப்
பேசாதப் பேய்களோடே. (உ)

அருட்டிரட் செம்பொற்சோதி
யம்பலத் தாடுகின்ற
விருட்டிரா கண்டத்தம்மா
னின்னருட் கண்டுசெய்யா
வரட்டரை யாடப் பேசு
மழுக்கரைப் புழுக்களாய
பிரட்டரைக் காணாகண்வாய்
பேசாதப் பேய்களோடே. (௩)

துணுக்கென வயனுமாலுந்
தொடர்வருஞ் சுடராயிப்பா
லணுக்கருங் கணியசெம்பொ
னம்பலத் தாடிக் கல்லாச்
சிணுக்கரைச் செத்தற்கொத்தைச்
சிதம்பரைச் சீத்தைப்பூத்தைப்
பிணுக்கரைக் காணாகண்வாய்
பேசாதப் பேய்களோடே. (௪)

திசைக்குமிக் குலவுசீர்த்தித்
தில்லைக்கூத் துகந்துதீய
நசிக்கவெண் ணீறதாடு
நமர்களை நணுகாநாய்க
ளசிக்கவா ரியங்களோது
மாதரைப் பேதவாதப்
பிசுக்கரைக் காணாகண்வாய்
பேசாதப் பேய்களோடே. (௫)

ஆடரவாடவாடு மம்பலத்
தமிர்தே யென்னுஞ்
சேடர்சே வடிகள்சூடத்
திருவிலா வுருவினரைச்
சாடரைச் சாட்கைமோடச்
சழக்கரைப் பிழக்கப்பிட்கப்
பேடரைக் காணாகண்வாய்
பேசாதப் பேய்களோடே. (சு

உருக்கியென் னுள்ளத்துள்ளே
யூறலந் தேறன்மாறாத்
திருக்குறிப் பருளுந்தில்லைச்
செல்வன்பாற் செல்லுஞ்செல்வி
னருக்கரை யள்ளல்வாய
கள்ளரை யவியாப்பாவப்
பெருக்கரைக் காணாகண்வாய்
பேசாதப் பேய்களோடே. (எ

செக்கரொத் திரவிநூறா
யிரத்திர ளொப்பாந்தில்லைச்
சொக்கரம் பலவரென்னுஞ்
சுருதியைக் கருதமாட்டா
வெக்கரைக் குண்டமிண்ட
வெத்தரைப் புத்தராதிப்
பொக்கரைக் காணாகண்வாய்
பேசாதப் பேய்களோடே. (அ

எச்சனைத் தலையைக்கொண்டு
செண்டடித் திடபமேறி
யச்சங்கொண் டமரரோட
நின்றவம் பலவற்கல்லாக்
கச்சணைக் கல்லாப்பொல்லாக்
கயவணைப் பசுநூல்கற்குப்
பிச்சணைக் காணுகண்வாய்
பேசாதப் பேய்களோடே. (கூ)

விண்ணவர் மகுடகோடி
மிடைந்தொளிர் மணிகள்வீசு
மண்ணலம் பலவன்கொற்ற
வரசனுக் காசையில்லாத்
தெண்ணணைத் தெருளாவுள்ளத்
திருளணைத் திட்டை முட்டைப்
பெண்ணணைக் காணுசண்வாய்
பேசாதப் பேய்களோடே. (க0)

சிறப்புடை யடியார்தில்லைச்
செம்பொனம் பலவற்சாளா
முறைப்புடை யடியார்கீழ்க்கீ
ழுறைப்பர் சேவடிநீறாடா
ரிறப்பொடு பிறப்பினுக்கே
யினியராய் மீண்டுமீண்டும்

பிறப்பனைக் காணாகண்வாய்
பேசாதப் பேய்களோடே.

திருச்சிற்றம்பலம்.

சேந்தனார் திருவிசைப்பா.

க. திருவீழிமிழலை

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஏகநாயகனை யிமையவர்க்கரசை
யென்னுயிர்க் கமுதினை யெதிரில்
போகநாயகனைப் புயல்வணற்கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையாவூர்ந்த
மேகநாயகனை மிகுதிருவீழி
மிழலைவிண்ணிழி செழுங்கோயில்
யோகநாயகனையன்றி மற்றொன்று
முண்டென வுணர்கிலேன்யானே.



கற்றவர்விழுங்குங் கற்பகக்கனியைக்
கரையிலாக் கருணைமாகடலை
மற்றவரறியா மாணிக்கமலையை
மதிப்பவர்மனமணி விளக்கைச்
செற்றவர்புரங்கள் செற்றவெஞ்சிவனைத்
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன்றன்னைக் கண்டுகண்டுள்ளங்
குளிரவென்கண் குளிர்ந்தனவே. (௨)

மண்டலத்தொளியை விலக்கியானுகர்ந்த
மருந்தையென்மாறிலா மணியைப்
பண்டலரயன்மாற் கரிதுமாயடியார்க்
கெளியதோர் பவளமால்வரையை
விண்டலர்மலர்வாய் வேரிவார்பொழில்சூழ்
திருவீழிமிழலையூ ராளுங்
கொண்டலங்கண்டத் தெங்குருமணியைக்
குறுகவல்வினைகுறு காவே. (௩)

தன்னடிநிழற்கீ ழென்னையுந்தகைத்த
சசிகுலா மவுலியைத் தானே
யென்னிடைக்கமல மூன்றினுட் டோன்றி
யெழுஞ்செழுஞ் சுடரினை யருள்சேர்
மின்னெடுங்கடலுள் வெள்ளத்தைவீழி
மிழலையுள் விளங்குவெண் பளிங்கின்
பொன்னடிக்கடிமை புக்கினிப்போக
விடுவனோ பூண்டுகொண் டேனே. (௪)

இத்தெய்வநெறிநன் றென்றிருண்மாயப்
பிறப்பறு விந்திரசாலப்
பொய்த்தெய்வநெறிநான் புகாவகைபுரிந்த
புராணசிந் தாமணிவைத்த
மெய்த்தெய்வநெறிநான் மறையவர்வீழி
மிழலைவிண் ணிழி செழுங்கோயி
லத்தெய்வநெறியிற் சிவமலாதவமு
மறிவரோ வறிவுடை யோரே. (௫)

அக்கனுவனைய செல்வமேசிந்தித்
தைவரோ டழுந்தியா னவமே
புக்கிடாவண்ணங் காத்தெனையாண்ட
புனிதனை வனிதைபா கனையெண்
டிக்கெலாங்குலவும் புகழ்த்திருவீழி
மிழலையான்றிருவடி நிழற்கீழ்ப்
புக்குநிற்பவர்தம் பொன்னடிககமலப்
பொடியணிந் தடிமைபூண் டேனே. (சா)

கங்கைநீரரிசிற்கரை யிருமருக்குங்
கமழ்பொழி றழுவியகழனித்
திங்களோர்தீண்ட நீண்டமாளிகைசூழ்
மாடநீடுயர் திருவீழித்
தங்குசீர்ச்செல்வத் தெய்வத்தான்றோன்றி
நம்பியைத்தன் பெருஞ்சோதி
மங்கையோர்பாகத் தென்னருமருந்தை
வருந்திநான் மறப்பனோவினியே. (எ)

ஆயிரங்கமல ஞாயிறாயிரமுக்
கண்முககரசர ணத்தோன்
பாயிருங்கங்கை பனிநிலாக்கரந்த
படர்சடைமின்னுப்பொன் முடியோன்
வேயிருந்தோளி யுமைமணவாளன்
விரும்பியமிழலைசூழ் பொழிலைப்
போயிருந்தேயும போற்றுவார்கழல்கள்
போற்றுவார் புரந்தராதிகளே. (௮)

எண்ணில்பல்கோடி சேவடிமுடிக
ளெண்ணில்பல்கோடிதிண் டோள்க
ளெண்ணில்பல்கோடி திருவுருநாம
மேர்கொண்முக்கண்முக மியல்பு
மெண்ணில்பல்கோடி யெல்லைக்கப்பாலாய்
நின்றைஞ்ஞாற் றந்தணரேத்து
மெண்ணில்பல்கோடி குணத்தரேர்வீழி
யிவர்நம்மை யாளுடையாரே. (௯)

தக்கன்வெங்கதிரோன் சலந்தரன்பிரமன்
சந்திரனிந்திர னெச்சன்
மிக்கநெஞ்சரக்கன் புரங்கரிகருடன்
மறலிவேளிவர்மிகைசெகுத்தோன்
திக்கெலாநிறைந்த புகழ்த்திருவீழி
மிழலையான் திருவடிநிழற்கீழ்ப்
புக்கிருந்தவர்தம் பொன்னடிக்கமலப்
பொடியணிந் தடிமைபூண்டேனே. (௧௦)

உளங்கொளமதுரக் கதிர்விரித்துயிர்மே
லருள்சொரி தருமுமாபதியை
வளங்கிளர்நதியு மதியமுஞ்சூடி
மழவிடை மேலவருவானை
விளங்கொளிவீழி மிழலைவேந்தேயென்
றுந்தனைச்சேந்தன் றாதையையான்
களங்கொளவழைத்தாற் பிழைக்குமோவடியே
ன் கைக்கொண்ட கனககற்பகமே. (கக)

பாடலங்காரப் பரிசில்காசருளிப்
பழுத்தசெந் தமிழ்மலர்சூடி
நீடலங்காரத் தெம்பெருமக்க
ணெஞ்சினு ணிறைந்துநின்றானை
வேடலங்காரக் கோலத்தினமுதைத்
திருவீழி மிழலையூரானுங்
கேடிலங்கீர்த்திக் கனககற்பகத்தைக்
கெழுமுதற் கெவ்விடத்தேனே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

உ. திருவாவடுதுறை.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

பொய்யாதவேதியர் சாந்தைமெய்ப்
புகழாளராயிரம் பூசுரர்
மெய்யேதிருப்பணி செய்சீர்
மிகுகாவிரிக்கரை மேய
வையாதிருவா வடுதுறை
யமுதேயென்றுன்னை யழைத்தக்கால்
மையார்தடங்கண் மடந்தைக்கொன்
றருளாதொழிவது மாதிமையே. (க)

மாதிமணங் கமழும்பொழின்
மணிமாடமாளிகை வீதிசூழ்
சோதிமதிலணி சாந்தைமெய்ச்
சுருதிவிதிவழி யோர்தொழு
மாதியமரர் புராணனை
மணியாவடுதுறை நம்பிநின்ற
நீதியறிகிலள் பொன்னெடுந்
திண்டோள்புணர நினைக்குமே. (உ)

நினைகருநிரந்தர னேயென்னு
நிலாக்கோலச்செஞ்சடைக் கங்கைநீர்
நனைக்குநலங்கிளர் கொனறைமே
னயம்பேசுநன்னுத னங்கைமீர்
மனக்கின்பவெள்ள மலைமகண்
மணவாளநம்பிவண் சாந்தையூர்
தனக்கின்பனாவடு தண்டுறைத்
தருணேந்துசேகர னென்னுமே. (௩)

தருணேந்துசேகர னேயெனுந்
தடம்பொன்னித் தென்கரைச்சாந்தையூர்ப்
பொருணேர்ந்த சிந்தையவர்தொழப்
புகழ்செல்வமல்கு பொற்கோயிலு
ளருணேர்ந்தமர் திருவாவடு
துறையாண்டவாண்ட கையம்மானே
தெருணேர்ந்தசித்தம் வலியவா
திலகநுதலி திறத்திலே. (௪)

திலகநுதலுமை நங்கைக்குந்
திருவாவடுதுறை நம்பிக்குங்
குலகவடியவர்க் கென்னையாட்
கொடுத்தாண்டுகொண்ட குணக்கட
லலதொன்றறிகின்றி லேமெனு
மணியும்வெண்ணீறஞ் செழுத்தலால்
வலதொன்றில ளிதற்கென்செய்கேன்
வயலந்தண்சாந்தையர் வேந்தனே. (௫)

வேந்தன்வளைத்தது மேருவில்
லரவுநாண்வெங்கனை செங்கண்மால்
போந்தமதிலணி முப்புரம்
பொடியாடவேதப் புரவித்தேர்
சாந்தைமுதலயன் சாரதி
கதியருளென்னுமித் தையலை
யாந்தண்டிருவா வடுதுறை
யான்செய்கையா ரறிகிற்பாரே. (சு)

கிற்போமெனத் தக்கன்வேள்விபுக்
கெடுத்தோடிக்கெட்ட வத்தேவர்கள்
சொற்போலுமெய்ப்பயன் பாவிகா
ளென்சொல்லிச்சொல்லுமித் தூமொழி
கற்போன்மனங்கனி வித்தவெங்
கருணையா வந்திடாயென்றுற்
பெற்போபெருந்திரு வாவடு
துறையாளிபேசா தொழிவதே. (எ)

ஒழிவொன்றிலாவுணை வண்ணமு
முலப்பிலளூறின்ப வெள்ளமு
மொழிவொன்றிலாப் பொன்னித்தீர்த்தமு
முனிகோடிகோடியா மூர்த்தியு
மழிவொன்றிலாச்செல்வச் சாந்தையூ
ரணியாவடுதுறை யாடிறை
ளிழிவொன்றிலாவகை யெய்தினின்
றிறுமாக்குமென்னிள மானனே. (அ)

மானேர்கலை வளையுங்கவர்ந்
துளங்கொள்ளைகொள்ள வழக்குண்டே
தேனேயமுதே யென்சித்தமே
சிவலோகநாயகச் செல்வமே
யானேயலம்பு புனற்பொன்னி
யணியாவடுதுறை யன்பர்தங்
கோனேநின மெய்யடியார்மனக்
கருத்தைமுடித்திடுங் குன்றமே. (கூ)

குன்றேநந்திகோகன கத்தய
னறியாநெறியென்னைக் கூட்டிடு
மென்றேயெங்கியேங்கி யழைக்கின்று
ளிளவல்லியெல்லை கடந்தன
ளன்றேயலம்பு புனற்பொன்னி
யணியாவடுதுறை யாடிடு
ணன்றேயிவணம் பரமல்ல
னவலோகநாயகன் பாலளே. (கo)

பாலுமமுதமுந் தேனுமா
யானந்தந்தந்துள்ளே பாலிப்பான்
போலுமெனுருயிர்ப் போகமாம்
புரகால காமபுராந்தகன்
சேலுங்கயலுந் திளைக்குநீர்த்
திருவாவடுதுறை வேந்தனோ
டாலுமதற்கே முதலுமா
மறிந்தோமரிவை பொய்யாததே. (கக)

திருச்சிற்றம்பலம்.

௫. திருவிடைக்கழி.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மாலுலாமனந்தந் தென்கையிற்சங்கம்
வவ்வினான் மலைமகன்மதலை
மேலுலாந்தேவர் குலமுழுதாளுங்
குமரவேள்வள்ளிதன் மணாளன்
சேலுலாங்கழனித் திருவிடைக்கழியிற்
றிருக்குராநீழற் கீழ்நின்ற
வேலுலாந்தடக்கை வேந்தனென்சேந்த
னென்னுமென் மெல்லியலிவளே. (க)

இவளைவாரிளமென் கொங்கைபீர்பொங்க
வெழில்கவர்ந்தா னிளங்காளை
கவளமாகரிமேற் கவரிசூழ்குடைக்கீழ்க்
கனகக்குன்றெனவருங் கள்வன்
றிவளமாளிகைசூழ் திருவிடைக்கழியிற்
றிருக்குராநீழற் கீழ்நின்ற
குவளைமாமலர்க்க ணங்கையானைக்குங்
குழகனல்லழகனங் கோவே (உ)

கோவினைப்பவளக் குழமணக்கோலக்
குழாங்கள்சூழ்கோழிவெல் கொடியோன்
காவனற்சேனை யென்னக்காப்பவனென்
பொன்னைமேகலை கவர்வானே
தேவினற்றலைவன் றிருவிடைக்கழியிற்
றிருக்குராநீழற் கீழ்நின்ற
தூவிநற்பீலி மாமயிலூருஞ்
சுப்பிரமண்ணியன் றனே. (௩

தானமர்பொருது வானவர்சேனை
மடியச்சூர் மார்பினைத்தடிந்தோன்
மானமர்தடக்கை வள்ளறன்பிள்ளை
மறைநிறைசட்டறம் வளரத்
தேனமர்பொழில்சூழ் திருவிடைக்கழியிற்
றிருக்குராநீழற் கீழ்நின்ற
கோனமர்கூத்தன் குலவிளங்களிறென்
கொடிக்கிடர் பயப்பதுங்குணமே. (௪

குணமணிக்குருளைக் கொவ்வைவாய்மடந்தை
படுமிடர்குறிக்கொளா தழகோ
மணமணிமறையோர் வானவர்வைய
முய்யமற்றடிய னேன்வாழத்
திணமணிமாடத் திருவிடைக்கழியிற்
றிருக்குராநீழற் கீழ்நின்ற
கணமணிபொருநீர்க் கங்கைதன்சிறுவன்
கணபதிபின்னிளங் கிளையே. (௫

கிளையிளஞ்சேயக் கிரிதனைக்கீண்ட
வாண்டகை கேடில்வேற்செல்வன்
வளையிளம்பிறைச்செஞ் சடையரன்மதலை
கார்நிறமாறிரு மருகன்
திளையிளம்பொழில்சூழ் திருவிடைக்கழியிற்
றிருக்குராநீழற் கீழ்நின்ற
முளையிளங்களிறென் மொய்குழற்சிறுமிக்
கருளுங்கொன் முருகவேள் பரிந்தே. (௬)

பரிந்தசெஞ்சுடரோ பரிதியோ மின்னோ
பவளத்தின்குழவியோ பசும்பொன்
சொரிந்தசிந்துரமோ தூமணித்திரளோ
சுந்தரத்தரசிது வென்னத்
தெரிந்தவைதிகர்வாழ் திருவிடைக்கழியிற்
றிருக்குராநீழற் கீழ்நின்ற
வரிந்தவெஞ்சிலைக்கை மைந்தனையஞ்சொன்
மையல்கொண்டை யுறும் வகையே. (௭)

வகைமிகுமசுரர் மாளவந்துழிஞை
வானமர்விளைத்த தாளாளன்
புகைமிகுமனலிற் புரம்பொடிபடுத்த
பொன்மலைவில்லிதன் புதல்வன்
திகைமிகுகீர்த்தித் திருவிடைக்கழியிற்
றிருக்குராநீழற் கீழ்நின்ற
தொகைமிகுநாமத் தவன்றிருவடிக்கென்
றுடியிடைமட ரொடுங்கினளே. (௮)

தொடங்கினண்மடலென் றணிமுடித்தொங்கற்
புறவிதழாகிலு மருளா
னிடங்கொளக்குறத்தி திறத்திலுமிறைவன்
மறத்தொழில்வார்த்தையு முடையன்
றிடங்கொள்வைதிகர்வாழ் திருவிடைக்கழியிற்
றிருக்குராநீழற் கீழ்நின்ற
மடங்கலைமலரும் பன்னிருநயனத்
தறுமுகத்தமுதினை மருண்டே. (௯)

மருண்டுறைகோயின் மல்குநன்குன்றப்
பொழில்வளர்மகிழ்திருப் பிடவூர்
வெருண்டமான்விழியார்க் கருள்செயாவிடுமே
விடலையே யெவர்க்குமெய்யன்பர்
தெருண்டவைதிகர்வாழ் திருவிடைக்கழியிற்
றிருக்குராநீழற் கீழ்நின்ற
குருண்டபூங்குஞ்சிப் பிறைச்சடைமுடிமுக்
கண்ணுடைக்கோமளக் கொழுந்தே. (௧0)

கொழுந்திரள்வாயார் தாய்மொழியாகத்
தூய்மொழி யமரர்கோமகனைச்
செழுந்திரட்சோதிச் செப்புறைச்சேந்தன்
வாய்ந்தசொல்லிவை சுவாமியையே
செழுந்தடம்பொழில்சூழ் திருவிடைக்கழியிற்
றிருக்குராநீழற் கீழ்நின்ற
வெழுங்கதிரொளியை யேத்துவார்கேட்பா
ரிடர்கெடுமாலுலா மனமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

கருவூர்த்தேவர்திருவிசைப்பா.

க. கோயில்.

பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

கணம்விரிகுடுமிச் செம்மணிக்கவைநாக்
கறையணற்கட்செவிப் பகுவாய்ப்
பணம்விரிதுத்திப்பொறிகொள்வெள்ளெயிற்று
ப் பாம்பணிபரமர்தங் கோயின்
மணம்விரிதருதேமாம்பொழின் மொழுப்பின்
மழைதவழ் வளரிளங்கமுகந்
திணர்நிரையரும்பு பெரும்பற்றப்புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம்பலமே. (க)

இவ்வரும்பிறவிப் பௌவநீர்நீந்து
மேழையேற் கென்னுடன்பிறந்த
வைவரும்பகையே யார்துணையென்று
லஞ்சலென்றருள் செய்வான்கோயில்
கைவரும்பழனங் குழைத்தசெஞ்சாலிக்
கடைசியர் களைதருநீலஞ்
செய்வரம்பரும்பும் பெரும்பற்றப்புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம்பலமே. (௨)

தாயினேரிரங்குந் தலைவவோவென்றுந்
　தமியனேன் றுணைவவோவென்று
நாயினேனிருந்து புலம்பினாலிரங்கி
　நலம்புரிபரமர்தங் கோயில்
வாயினேரரும்பு மணிமுருக்கலர
　வளரிளஞ்சோலைமாந் தளிர்செந்
தீயினேரரும்பும் பெரும்பற்றப்புலியூர்த்
　திருவளர் திருச்சிற்றம்பலமே. (௩)

துந்துபிகுழல்யாழ் மொந்தைவாணியம்பத்
　தொடர்ந்திரு டியர்கணந்துதிப்ப
நந்திகைமுழவ முகிலெனமுழங்க
　நடம்புரிபரமர்தங் கோயி
லந்தியின்மறைநான் காரணம்பொதிந்த
　வரும்பெறன்மறைப்பொருண் மறையோர்
சிந்தையிலரும்பும் பெரும்பற்றப்புலியூர்த்
　திருவளர் திருச்சிற்றம்பலமே. (௪)

கண்பனியரும்பக் கைகண்மொட்டித்தென்
　களைகணேயோலமென் றோலிட்
டென்பெலாமுருகு மன்பர்தங்கூட்டத்
　தென்னையும்புணர்ப்பவன் கோயில்
பண்பலதெளிதேன்பாடி நின்றாடப்
　பனிமலர்ச்சோலைசூழ் மொழுப்பிற்
செண்பகமரும்பும் பெரும்பற்றப்புலியூர்த்
　திருவளர் திருச்சிற்றம்பலமே. (௫)

நெஞ்சிட ரகல வகம்புகுந் தொடுங்கு
 நிலைமையோ டருள்கிழித் தெழுந்த
வெஞ்சுடர் சுடர்வ போன்றொளி துளும்பும்
 விரிசடை யடிகணங் கோயி
லஞ்சுடர்ப் புரிசை யாழிசூழ் வட்டத்
 தகம்படி மணிநிரை பரந்து
செஞ்சுட ரரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
 திருவளர் திருச்சிற் றம்பலமே. (௬)

பூத்திர ளுருவஞ் செங்கதிர் விரியாப்
 புந்தியில் வந்தமால் விடைபோன்
மூத்திரட் பளிங்கிற் றோன்றிய தோற்றந்
 தோன்றநின் றவன்வளர் கோயி
லூத்திரண் மறையோர்ந் தோமகுண் டத்து
 நறுநெயான் மறையவர் வளர்த்த
தீத்திர ளரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
 திருவளர் திருச்சிற் றம்பலமே. (௭)

சீர்த்ததிண் புவன முழுவது மேனைத்
 திசைகளோ டண்டங்க ளனைத்தும்
போர்த்ததம் பெருமை சிறுமைபுக் கொடுங்கு
 புணர்ப்புடை யடிகடங் கோயி [ம்
லார்த்துவந் தமரித் தமரரும் பிறரு
 மலைகட லிடுதிரைப் புனிதத்
தீர்த்தநீ ரரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
 திருவளர் திருச்சிற் றம்பலமே. (அ)

பின்னுசெஞ் சடையும் பிறைதவழ் மொழுப்பு
பெரியதங் கருணையுங் காட்டி [ம்
யன்னைதேன் கலந்தின் னமுதுகந் தளித்தாங்
கருள்புரி பரமர்தங் கோயில்
புன்னைதேன் சொரியும் பொழிலகங் குடைந்து
பொறிவரி வண்டினம் பாடுந்
தென்னதே னரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற் றம்பலமே. (௯)

உம்பர்நா டிம்பர் விளங்கியாங் கெங்கு
மொளிவளர் திருமணிச் சுடர்கான்
றெம்பிரா னடஞ்செய் சூழலங் கெல்லா
மிருட்பிழம் பறவெறி கோயில்
வம்புலாங் கோயில் கோபுரங் கூடம்
வளர்நிலை மாடமா ளிகைகள்
செம்பொனு லரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற் றம்பலமே. (௧௰)

இருந்திரைத் தரளப் பரவைசூ ழகலத்
தெண்ணிலங் கண்ணில்புன் மாக்க
டருந்துயிர்ப் பருவத் தறிவுறு கருவூர்த்
துறைவளர் தீந்தமிழ் மாலை
பொருந்தருங் கருணைப் பரமர்தங் கோயிற்
பொழிலகங் குடைந்துவண் டுறங்கச்
செருந்திநின் றரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற் றம்பலமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

௨. திருக்களந்தையாதித்தேச்சரம்.

பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

கலைகடம் பொருளு மறிவுமா யென்னை
கற்பினிற் பெற்றெடுத் தெனக்கே
முலைகடந் தருளுந் தாயினு நல்ல
முக்கணா னுறைவிடம் போலு
மலைகுடைந் தனைய நெடுநிலை மாட
மருங்கெலா மறையவர் முறையோத்
தலைகடல் முழங்கு மந்தணீர்க் களந்தை
யணிதிக ழாதித்தேச் சரமே. (௧)

சந்தன களபந் துதைந்தநன் மேனித்
தவளவெண் பொடிமுழு தாடுஞ்
செந்தழ லுருவிற் பொலிந்துநோக் குடைய
திருநுத லவர்க்கிடம் போலு
மிந்தன விலங்க லெறிபுனந் தீப்பட்
டெரிவதொத் தெழுநிலை மாட
மந்தண ரழலோம் பலைபுனற் களந்தை
யணிதிக ழாதித்தேச் சரமே. (௨)

கரியரோ யிடந்தான் செய்யரோ யொருபாற்
கழுத்திலோர் தனிவடஞ் சேர்த்தி
முரிவரோ முனிவர் தம்மொடா னிழற்கீழ்
முறைதெரிந் தோருடம் பினரா
யிருவரோ முக்க ணாற்பெருந் தடந்தோ
ளிறைவரோ மறைகளுந் தேட
வரியரோ யாகி லவரிடங் களந்தை
யணிதிக ழாதித்தேச் சரமே. (௩)

பழையராந் தொண்டர்க் கெளியரோ மிண்டர்க்
கரியரோ பாவியேன் செய்யும்
பிழையெலாம் பொறுத்தென் பிணிபொறுத் த
பிச்சரோ நச்சரா மிளிருங் [ருளாப்
குழையரா யவந்தென் குடிமுழு தாளுங்
குழகரோ யொழுகுநீர்க் கங்கை
யழகரோ யாகி லவரிடங் களந்தை
யணிதிக ழாதித்தேச் சரமே. (௪)

பவளமே மகுடம் பவளமே திருவாய்
பவளமே திருவுடம் பதனிற்
றவளமே களபந் தவளமே புரிநூ
றவளமே முறுவலா டரவந்
துவளுமே கலையுந் துகிலுமே யொருபாற்
றுடியிடை யிடமருங் கொருத்தி
யவளுமே யாகி லவரிடங் களந்தை
யணிதிக ழாதித்தேச் சரமே. (௫)

நீலமே கண்டம் பவளமே திருவாய்
நித்தில நிரைத்திலங் கினவே
போலுமே முறுவ னிறையவா னந்தம்
பொழியுமே திருமுக மொருவர்
கோலமே யச்சோ வழகிதே யென்று
குழைவரோ கண்டவ ருண்ட
தாலமே யாகி லவரிடங் களந்தை
யணிதிக ழாதித்தேச் சரமே. (௬)

திக்கடா நினைந்து நெஞ்சிடிந் துருகுந்
திறத்தவர் புறத்திருந் தலச
மைக்கடா வனைய வென்னையாள் விரும்பி
மற்றொரு பிறவியிற் பிறந்து
பொய்க்கடா வண்ணங் காத்தெனக் கருளே
புரியவும் வல்லரோ யெல்லே
யக்கடா வாகி லவரிடங் களந்தை
யணிதிக ழாதித்தேச் சரமே. (௭)

மெய்யரோ மெய்யர்க் கிடுதிரு வான
விளக்கரோ யெழுதுகோல் வளையாண்
மையரோ வையம் பலிதிரிந் துறையு
மயானரோ யுளங்கலந் திருந்தும்
பொய்யரோ பொய்யர்க் கடுத்தவான் பளிங்கின்
பொருள்வழி யிருள்கிழித் தெழுந்த
வையரோ யாகி லவரிடங் களந்தை
யணிதிக ழாதித்தேச் சரமே. (௮)

குமுதமே திருவாய் குவளையே களமுங்
குழையதே யிருசெவி யொருபால்
விமலமே கலையு முடையரோ சடைமேன்
மிளிருமே பொறிவரி நாகங்
கமலமே வதனங் கமலமே நயனங்
கனகமே திருவடி நிலைநீ
ரமலமே யாகி லவரிடங் களந்தை
யணிதிக ழாதித்தேச் சரமே. (௯)

நீரணங் கசும்பு கழனிசூழ் களந்தை
நிறைபுக ழாதித்தேச் சரத்து
நாரணன் பரவுந் திருவடி நிலைமே
னலமலி கலைபயில் கருவூ
ராரண மொழிந்த பவளவாய் சுரந்த
வமுதமூ றியதமிழ் மாலை
யோரணங் கிருநான் கிரண்டிவை வல்லோ
ரிருள்கிழித் தெழுந்தசிந் தையரோ. (௧0)

திருச்சிற்றம்பலம்.

௫. திருக்கீழ்க்கோட்டூர்மணியம்பலம்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

தளிரொளிமணிப்பூம் பதஞ்சிலம்பலம்பச்
சடைவிரித் தலையெறிகங்கைத்
தெளிரொளிமணிநீர்த் திவலைமுத்தரும்பித்
திருமுகமலர்ந்து சொட்டட்டக்
கிளரொளிமணிவண் டறைபொழிற்பழனங்
கெழுவுகம்பலைசெய் கீழ்க்கோட்டூர்
வளரொளிமணியம் பலத்துணின்றாடு
மைந்தனென்மனங் கலந்தானே. (௧)

துண்டவெண்பிறையும் பார்சடைமொழுப்பு
ஞ் சுழியமுஞ் சூலமுநீல
கண்டமுங்குழையும் பவளவாயிதழுங்
கண்ணுதற்றிலகமுங் காட்டிக்
கெண்டையுங்கயலு முகளுநீர்ப்பழனங்
கெழுவுகம்பலைசெய் கீழ்க்கோட்டூர்
வண்டறைமணியம் பலத்துணின்றாடு
மைந்தனென்மனங் கலந்தானே. (௨)

திருநுதல் விழியும் பவளவா யிதழுந்
திலகமு முடை யவன் சடைமேற்
புரிதரு மலரின் றாதுநின் றூதப்
போய்வரும் தும்பிகா ளிங்கே
கிரிதவழ் முகிலின் கீழ்த்தவழ் மாடங்
கெழுவுகம்பலைசெய் கீழ்க் கோட்டூர்
வருதிறன் மணியம் பலவனைக் கண்டென்
மனத்தையுங் கொண்டு போதுமினே. (௩)

தெள்ளுநீ றவனி றென்னுடல் விரும்புஞ்
செவியவ னறிவுநூல் கேட்கு
மெள்ளவே யவன்பேர் விளம்பும்வாய் கண்கள்
விமானமே நோக்கி வெவ் வுயிர்க்குங்
கிள்ளைபூம் பொதும்பிற் கொஞ்சிமாம் பொழிற்
கெழுவு கம்பலைசெய் கீழ்க்கோட்டூர் [கே
வள்ளலே மணியம் பலத்து ணின்றாடு
மைந்தனே யென்னுமென் மனனே. (௪)

தோழியாஞ் செய்த தொழிலெனெம் பெருமா
றுணைமலர்ச் சேவடி காண்பா [ன்
னூழிதோ றூழி யுணர்ந்துளங் கசிந்து
நெக்குநைந் துளங்கரைந் துருக்குங்
கேழலும் புள்ளு மாகிநின் றிருவர்
கெழுவு கம்பலைசெய் கீழ்க்கோட்டூர்
வாழியமணி யம்பல வனைக் காண்பான்
மயங்கவுமா லொழி யோமே. (௫)

என்செய்கோந் தோழி தோழிநீ துணையா
யிரவுபோம் பகலெரு மாகி
லஞ்சலோ வென்னு னூழியுந் திரையு
மலமரு மாறுகண் டயர்வன்
கிஞ்சுக மணிவா யரிவையர் தெருவிற்
கெழுவுகம் பலைசெய் கீழ்க்கோட்டூர்
மஞ்சணி மணியம் பலவவோ வென்று
மயங்குமென் மாலையம் பொழுதே (௬)

தழைதவழ் மொழுப்புந் தவளநீற் றொளியுஞ்
சங்கமுஞ் சகடை யின் முழக்குங்
குழைதவழ் செவியுங் குளிர்சடைத் தெண்டுங்
குண்டை யுங் குழாங்கொடு தோன்றுங்
கிழைதவழ் கனகம் பொழியுநீர்ப் பழனங்
கெழுவுகம் பலைசெய் கீழ்க்கோட்டூர்
மழைதவழ் மணியம் பலத்துணின்றாடு
மைந்தர்தம் வாழ்வுபோன் றதுவே. (௭)

தன்னக மழலைச் சிலம்பொடு சதங்கை
தமருகந்திருவடி திருநீ
றின்னகை மழலை கங்கைகோங் கிதழி
யிளம்பிறை குழைவள ரிளமான்
கின்னர முழவ மழலையாழ் வீணை
கெழுவுகம் பலைசெய் கீழ்க்கோட்டூர்
மன்னவன் மணியம் பலத்துணின் றாடு
மைந்தனென் மனத்துள் வைத்தனனே. (௮)

யாதுநீ நினைவ தெவரையா முடைய
தெவர்களும யாவையுந் தானாய்ப்
பாதுகை மழலைச் சிலம்பொடு புகுந்தென்
பனிமலர்க கண்ணுணின் றகலான்
கேதகை நிழலைக் குருகென மருவிக்
கெண்டைகள் வெருவுகீழ்க் கோட்டூர்
மாதவன் மணியம் பலத்துணின் றாடு
மைந்தனென் மனம்புகுந் தானே. (௯)

அந்திபோ லுருவு மந்தியிற் பிறைசே
ரழகிய சடையும்வெண் ணீறுஞ்
சிந்தையா னினையிற் சிந்தையுங் காணேன்
செய்வதென் றெளிபுன லலங்கற்
கெந்தியா வுகளுங் கெண்டைபுண் டரீகங்
கிழிக்குந்தண் பணைசெய் கீழ்க்கோட்டூர்
வந்துநாண் மணியம் பலத்துணின் றாடு
மைந்தனே யறியுமென் மனமே. (௰)

கித்தி நின்றாடு மரிவையர் தெருவிற்
கெழுவுகம் பலைசெய் கீழ்க்கோட்டூர்
மத்தனை மணியம் பலத்துணின் றாடு
மைந்தனை யாரணம் பிதற்றும
பித்தனேன் மொழிந்த மணிநெடு மாலை
பெரியவர்க் ககலிரு விசும்பின்

முத்தியா மென்றே யுலகர்ஓத் துவரோன்
முகமலர்ந் தெதிர்கொளுந் திருவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ச. திருமுகத்தலை.

பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

புவனநா யகனே யகவுயிர்க் கமுதே
பூரணா வாரணம் பொழியும்
பவளவாய் மணியே பணிசெய்வார்க் கிரங்கும்
பசுபதீ பன்னகா பரணா
அவனிநா யிறுபோன் றருள்புரிந் தடியே
னகத்திலு முகத்தலை மூதூர்த்
தவளமா மணிப்பூங் கோயிலு மமர்ந்தாய்
தனியனேன் றனிமை நீங்குதற்கே. (க)

புழுங்குதீ வினையேன் வினைகெடப் புகுந்து
புணர்பொரு ளுணர்வுநூல வகையால்
வழங்குதேன் பொழியும் பவளவாய் முக்கண்
வளரொளி மணிநெடுங் குன்றே

முழங்குதீம் புனல்பாய்ந் திளவரா லுகளு
முகத்தலை யகத்தமர்ந் தடியேன்
விழுங்குதீங் கனியா யினியவா ரெய்த
வெள்ளமா யுள்ளமா யினையே. (உ)

கன்னெகா வுள்ளக் கள்வனே னின்கட்
கசிவிலேன் கண்ணினீர் சொரியேன்
முன்னகா வொழியே னாயினுஞ் செழுநீர்
முகத்தலை யகத்தமர்ந் துறையும்
பன்னகா பரணா பவளவாய் மணியே
பாவியே னாவியுள் புகுந்த
தென்னகா ரணநீ யேழைநா யடியேற்
கெளிமையோ பெருமை யாவதுவே. (ங)

கேடிலா மெய்ந்நூல் கெழுமியுஞ் செழுநீர்க்
கிடையனா ருடைய வென் னெஞ்சிற்
பாடிலா மணியே மணியுமிழ்ந் தொளிரும்
பரமனே பன்னகா பரணா
மேடெலாஞ் செங்நெற் பசுங்கதிர் விளைந்து
மிகத்திகழ் முகத்தலை மூதூர்
நீடனா யெனினு முள்புகுந் தடியே
னெஞ்செலா நிறைந்து நின்றாயே (ச)

அக்கனா வனைய செல்வமே சிந்தித்
தைவரோ டென்னொடும் விளைந்த
இக்கலா முழுது மொழியவந் துள்புக்
கென்னையா ளாண்ட நாயகனே

முககணா யகனே முழுதுல கிறைஞ்ச
முகத்தலை யகத்தமர்ந் தடியேன்
பக்கலா னந்த மிடை யறா வண்ணம்
பண்ணினாய் பவளவாய் மொழிந்தே (௫)

புனல்பட வுருகி மண்ண ழல் வெதும்பிப்
பூம்புனல் பொதிந் துயிரளிக்கும்
வினைபடு நிறைபோ னிறைந்தவே தகத்தென்
மனநெக மகிழ்ந்த பேரொளியே
முனைபடு மதின்மூன் றெரித்த நாயகனே
முகத்தலை யகத்தமர்ந் தடியேன்
வினைபடு முடனீ புகுந்துநின் றமையால
விழுமிய விமான மாயினதே. (௬)

விரியுநீ ராலத் துருமையின் சாந்தின்
வெண்மையுஞ் செந்நிறத் தொளியுங்
கரியுநீ றாடுங் கனலுமொத் தொளிருங்
கழுத்திலோர் தனிவட ங் கட்டி
முரியுமா றெல்லா முரிந்தழ கியையாய்
முகத்தலை யகத்தமர்ந் தாயைப்
பிரியுமா றுளதே பேய்களோஞ் செய்த
பிழைபொறுத் தாண்டபே ரொளியே. (௭)

என்னை யுன்பாத பங்கயம் பணிவித்
தென்பெலா முருகநீ யெளிவந் [று
துன்னையென் பால்வைத் தெங்குமெஞ் ஞான
மொழிவற நிறைந்த வொண்சுடரே

முன்னையென் பாச முழுவது மகல
முகத்தலை யகத்தமர்ந் தெனக்கே
கன்னலும் பாலுந் தேனுமா ரமுதுங்
கனியுமா யினியை யாயினையே. (அ)

அம்பரா வனலா வனிலமே புவிநீ
யம்புவே யிந்துவே யிரவி
யும்பரா லொன்று மறிவொணா வணுவா
யொழிவற நிறைந்த வொண்சுடரோ
மொய்ம்பராய் நலஞ்சொன் மூதறி வாளர்
முகத்தலை யகத்தமர்ந் தெனக்கே
யெம்பிரா னாகி யாண்டநீ மீண்டே
யெந்தையுந் தாயு மாயினையே. (கூ)

மூலமாய் முடிவாய் முடிவிலா முதலாய்
முகத்தலை யகத்தமர்ந் தினிய
பாலுமா யமுதாம் பன்னகா பரணன்
பனிமலர்த் திருவடி யிணைமே
லாலையம் பாகி னனையசொற் கருவூ
ரமுதுறழ் தீந்தமிழ் மாலை
சீலமாப் பாடு மடியவ ரெல்லாஞ்
சிவபதங் குறுகிநின் றாரே. (கய)

திருச்சிற்றம்பலம்.

ரு. திரைலோக்கியசுந்தரம்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

நீரோங்கி வளர்கமல
நீர்பொருந்தாத் தன்மையன்றே
யாரோங்கி முகமலர்ந்தாங்
கருவினையேன் றிறமறந்தின்
றூரோங்கும் பழிபாரா
துன்பாலே விழுந்தொழிந்தேன்
சீரோங்கும் பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. (க)

மையாத மனத்தினனை
மைவிப்பா னித்தெருவே
யையாநீ யுலாப்போந்த
வன்றுமுத லின்றுவரை
கையாரத் தொழுதருவி
கண்ணாரச் சொரிந்தாலுஞ்
செய்யாயோ வருள்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. (உ)

அம்பளிங்கு பகலோன்பா
லடைப்பற்றா யிவண்மனத்தின்
முன்பளிந்த காதலுநின்
முகந்தோன்ற விளங்கிற்றால்
வம்பளிந்த கனியேயென்
மருந்தேநல் வளர்முந்தச்
செய்பளிங்கே பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே (௩)

மைஞ்ஞின்ற குழலாள்தன்
மனந்தரவும் வளைதாரா
திஞ்ஞின்ற தோரணவை
னிவன்செய்த தியார்செய்தார்
மெய்ஞ்ஞின்ற தமர்க்கெல்லா
மெய்ஞ்ஞிறகும் பண்பினுறை
செய்ஞ்ஞுன்றி யிலன்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. (௪)

நீவாரா தொழிந்தாலு
நின்பாலே விழுந்தேழை
கோவாத மணிமுத்துங்
குளமைமலர் சொரிந்தனவா
லாவாவென் றருள்புரியா
யமரர்கணந் தொழுதேத்துந்
தேவாதென் பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. (௫

முழுவதுநீ யாயினுமிம்
மொய்குழலாண் மெய்ம்முழுதும்
பழுதெனவே நினைந்தோராள்
பயில்வதுநின் னொருநாம
மழுவதுநின் றிறனினைந்தே
யதுவன்றே பெறும்பேறு
செழுமதில்சூழ் பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. (சு)

தன்சோதி யெழுமேனித்
தபனியப்பூஞ் சாய்க்காட்டா
வுன்சோதி யெழில்காண்பா
னேவிடவு முருக்கட்டாய்
துஞ்சாகண் ணிவளுடைய
துயர்தீருமா றுரையாய்
செஞ்சாலி வயற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. (எ)

அரும்பேதைக் கருள்புரியா
தொழிந்தாய்நின் னவிர்சடைமே
னிரம்பாத பிறைதூவு
நெருப்பொடுநின் கையிலியாழ்
நரம்பாலு முயிரீர்ந்தாய்
நளிர்புரிசைக் குளிர்வனம்பா
திரம்போது சொரிகோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. (அ)

ஆரூத பேரன்பி
னவருள்ளங் குடிகொண்டு
வேறாகப் பலர்சூழ
வீற்றிருத்தி யதுகொண்டு
வீறுடி யிவளுன்னைப்
பொதுநீப்பான் விரைந்தின்னந்
தேறுடென் பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. (கூ)

சரிந்ததுகி றளர்ந்தவிடை
யவிழ்ந்தகுழ லிளந்தெரிவை
யிருந்தபரி சொருநாள்கண்
டிரங்காயெம் பெருமானே
முரிந்தநடை மடந்தையர்த
முழங்கொலியும் வழங்கொலியுந்
திருந்துவிழ வணிகோடைத்
திரைலோகிய சுந்தரனே (க0)

ஆரணத்தேன் பருகியருந
தமிழ்மாலை கமழவருங்
காரணத்தி னிலைபெற்ற
கருவூரன் றமிழ்மாலை
பூரணத்தா லீரைந்தும்
போற்றிசைப்பார் காந்தாரஞ்
சீரணைந்த பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. (கக)

திருச்சிற்றம்பலம்.

௰. கங்கைகொண்டசோளேச்சரம்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

அன்னமாய் விசும்பு பறந்தயன் றேட
வங்ஙனே பெரியநீ சிறிய
வென்னையாள் விரும்பி யென்மனம் புகுந்த
வெளிமையை யென்றுநான் மறக்கேன்
முன்னமா லறியா வொருவனா மிருவா
முக்கணா நாற்பெருந் தடந்தோள்
கன்னலே தேனே யமுதமே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (க)

உண்ணெகிழ்ந் துடல நெக்குமுக் கண்ணா
வோலவென் றோலமிட் டொருநாண்
மண்ணினின் றலறேன் வழிமொழி மாலை
மழலையஞ் சிலம்படி முடிமேற்
பண்ணிநின் றுருகேன் பணிசெயே னெனினும்
பாவியே னாவியுள் புகுந்தென்
கண்ணினின் றகலா னென்கொலோ கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (உ)

அற்புதத் தெய்வ மிதனின்மற் றுண்டே
யன்பொடு தன்னையஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத் துள்ளமள் ளூறுந்
தொண்டருக் கெணடிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையுங்
கற்பகப் பொழிலு முழுதுமாங் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (௩)

ஐயபொட் டிட்ட வழகுவா ணுதலு
மழகிய விழியும்வெண் ணீறுஞ்
சைவம்விட் டிட்ட சடைகளுஞ் சடைமேற்
றரங்கமுஞ் சதங்கையுஞ் சிலம்பு
மொய்கொளெண் டிக்குங்க ண்டநின் றொண்ட
ர் முகமலர்ந் திருகணீ ரரும்பக்
கைகண்மொட் டிக்கு மென்கொலோ கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (௪)

சுருதிவானவனுந் திருநெடு மாலாஞ்
சுந்தர விசும்பினிந் திரனும்
பருதிவா னவனும் படர்சடை முக்கட்
பகவனு மகவுயிர்க் கமுதா
மெருதுவா கனனு மெயில்கண்மூன் றெரித்த
வேறுசே வகனுமாம் பின்னுங்
கருதுவார் கருது முருவமாங் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (௫)

அண்டமோ ரணுவாம் பெருமைகொண் டணு
வோ ரண்டமாஞ் சிறுமைகொண் டடியே
னுண்டவூ ணுனக்காம் வகையென துள்ள
முள்கலந் தெழுபரஞ் சோதி
கொண்டநாண் பாம்பாம் பெருவரை வில்லிற்
குறுகலார் புரங்கண்மூன் றெரித்த
கண்டனே நீல கண்டனே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (௬)

மோதலைப் பட்ட கடல்வயி றுதித்த
முழுமணித் திரளமு தாங்கே
தாய்தலைப் பட்டங் குருகியொன் றாய
தன்மையி லென்னைமுன் னீன்ற
நீதலைப் பட்டா லியானுமவ் வகையே
நிசிசர ரிருவரோ டொருவர்
காதலிற் பட்ட கருணையாய் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (௭)

தத்தையங் கனையார் தங்கண்மேல் வைத்த
தயாவைநூ றாயிரங் கூறிட்
டத்திலங் கொருகூ றுன்கண்வைத் தவருக்
கமருல களிக்குநின் பெருமை
பித்தனென் றொருகாற் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யுங்
கைத்தல மடியேன் சென்னிமேல் வைத்தகங்
கை கொண்டசோ ளேச்சரத் தானே. (௮)

பண்ணிய தழல்காய் பாலளா நீர்போற்
பாவமுன் பறைந்துபா லனைய
புண்ணியம் பின்சென் றறிவினுக் கறியப்
புகுந்ததோர் யோகினிற் பொலிந்து
நுண்ணியை யெனினு நம்பநின் பெருமை
நுன்னிடை யொடுங்கநீ வந்தென்
கண்ணினுண் மணியிற் கலந்தனை கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (௯)

அங்கைகொண் டமரர் மலர்மழை பொழிய
வடிச்சிலம் பலம்பவந் தொருநா
ளுங்கைகொண் டடியேன் சென்னிவைத் தெ
ன்னை யுய்யக்கொண் டருளினை மருங்கிற்
கொங்கைகொண் டனுங்குங் கொடியிடை கா
ணிற் கொடியளென் றவிர்சடை முடிமேற்
கங்கைகொண் டிருந்த கடவுளே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (௧0)

மங்கையோ டிருந்தே யோகுசெய் வானை
வளரிளந் திங்களை முடிமேற்
கங்கையோ டணியுங் கடவுளைக் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானை
யங்கையோ டேந்திப் பலிதிரி கருவூ
ரறைந்தசொன் மாலையா லாழிச்
செங்கையோ டுலகி லரசுவீற் றிருந்து
திளைப்பதுஞ் சிவனருட் கடலே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

எ. திருப்பூவணம்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

திருவருள் புரிந்தா ளாண்டுகொண் டிங்ஙன்
  சிறியனுக் கினியது காட்டிப்
பெரிதருள் புரிந்தா னந்தமே தருநின்
  பெருமையிற் பெரியதொன் றுளதே
மருதர சிருங்கோங் ககின்மரஞ் சாடி
  வரைவளங் கவர்ந்திழி வைகைப்
பொருதிரை மருங்கோங் காவண வீதிப்
  பூவணங் கோயில்கொண் டாயே. (க)

பாம்பணைத் துயின்றோ னயன்முதற் றேவர்
  பன்னெடுங் காலநிற் காண்பா
னேம்பலித் திருக்க வென்னுளம் புகுந்த
  வெளிமையை யென்றுநான் மறக்கேன்
றேம்புனற் பொய்கை வாளைவாய் மடுப்பத்
  தெளிதரு தேறல்பாய்க் தொழுகும்
பூம்பணைச் சோலை யாவண வீதிப்
  பூவணங் கோயில்கொண் டாயே. (உ)

கரைகட லொலியிற் றமருகத் தரையிற்
கையினிற் கட்டிய கயிற்று
விருதலை யொருநா வியங்கவந் தொருநா
ளிருந்திடா யெங்கள்கண் முகப்பே
விரிதிகழ் விழவின் பின்செல்வோர் பாடல்
வேட்கையின் வீழ்ந்தபோ தவிழ்ந்த
புரிசடை துகுக்கு மாவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. (௩)

கன்னியன் மணியின் சூழல்புக் கங்கே
கலந்துபுக் கொடுங்கினேற் கங்ங
னுன்னியை யெனினு நம்பநின் பெருமை
நுண்ணிமை யிறந்தமை யறிவன்
மன்னியன் மரபிற் றங்கிருண் மொழுப்பின்
வண்டினம் பாடநின் றாடும்
புன்னிய மகளி ராவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. (௪)

கடுவினைப் பாசக் கடல்கடந் தைவர்
கள்ளரை மெள்ளவே துரந்து
னடியிணை யிரண்டு மடையுமா றடைந்தே
னருள்செய்வா யருள்செயா தொழிவாய்
நெடுநிலை மாடத் திரவிருள் கிழிக்க
நிலைவிளக் கலகில்சா லேகம்
புடைகிடந் திலங்கு மாவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. (௫)

செம்மனக் கிழவோ ரன்புதா வென்றுன்
சேவடி பார்த்திருந் தலைச
வெம்மனங் குடிகொண் டிருப்பதற் கியானு
மென்னுடை யடிமைதா னியாதே
யம்மனங் குளிர்நாட் பலிக்கெழுந் தருள
வரிவைய ரவிழ்குழற் சுரும்பு
பொம்மென முரலு மாவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. (௬)

சொன்னவின் முறைநான் காரண முணராச்
சூழல்புக் கொளித்தநீ யின்று
கன்னலின் மனத்தென் கண்வலைப் படுமிக்
கருணையிற் பெரியதொன் றுளதே
மின்னவில் கனக மாளிகை வாய்தல்
விளங்கிளம் பிறைதவழ் மாடம்
பொன்னவில் புரிசை யாவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. (௭,௮,௯)

பூவணங் கோயில் கொண்டெனை யாண்ட
புனிதனை வனிதைபா கனைவெண்
கோவணங் கொண்டு வெண்டலை யேந்துங்
குழகனை யழகெலா நிறைந்த
தீவணன் றன்னைச் செழுமறை தெரியுந்
திகழ்கரு வூரனே னுரைத்த
பாவணத் தமிழ்கள் பத்தும்வல் லார்கள்
பரமன தருவமா குவரோ. (௧௦)

திருச்சிற்றம்பலம்.